# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சூச] யாழ்ப்பாணம்:- நந்தன ஞூ ஐப்பசி உஉ வெள்ளிக்கிழமை (7 Nov. 1952) [இல - ருள]


# தெய்வத்திருப்பெயரின்சத்தி

## தூய்மை யுதவிப் பேரின்பம் பயப்பது

இவ்வுலகில் எதை உடையராகவிருப்பதால், நாங்கள் தூய சாந்தியும் இன்பமும் அடைய முடியுமோ, அவ்வருமையான பொருள் கடவுளின் பெயரே. அதன் இனிய ஓசை, அது குறிக்கும் ஒரே உண்மையைப் பற்றிய தூய அறிவோடு கலந்து மனதை ஆசைகளினின்றும் விடுவித்து, மனித ஆன்மாவில் இயல்பாகவுள்ள நித்திய இன்பத்தை வெளியே பெருகச் செய்கின்றது. மனிதனை வாழ்க்கைச் சுழியிலிருந்து, அவனின் நித்திய ஆத்மீக இயல்பெனும் துறைக்குக்கொண்டு செல்லும் சக்தி வாய்ந்த படகு இத்தெய்வத திருநாமமே அவன் பெயர் மனிதனைத் தெய்வமாக மாற்றுகிறது. உலகிலே வேற்றுமை உணர்ச்சியையும் துக்கத்தையும் உண்டாக்கி எல்லாச் சரீர மனபுத்தி வியாதிகளையும் மாற்றும் ஒரு மேலான மருந்து. அத்தெய்வத் திருநாமமே அப் பேரொலிக்கும் இன்னிசை மனித னுணர்ச்சிகளைச் சாந்தப்படுத்தி ஆறுதலளிக்கிறது.

அத்தெய்வத் திருப்பெயர் உலகங்களுக்கும் அவற்றிறசப் பாற் பட்டவைக்கும் தலைவனும் அதிகாரியுமான இறைவனைக் குறிக்கின்றது. பெயரொடும் இசைவதெனில் எல்லையிலா உண்மையொடு இசைவதாகும். இங்ஙனமாசக் கீழ்நிலையில் தளர்வுற்ற அறியாமை மிக்க மனித இயல்பை மாட்சிமிகுந்த சுயவொளி யியல்பினனாகும் நிலைக்குச் செலுத்துகிறது. அவனது பெயரின் இசையால் இறைவனொடு உறவுடையவனாயிருப்பது அழியா நிலையின் பேரின்பத்தை அடைவதாகும்.

அளவுகடந்த அன்பும் கருணையும் நிறைந்த உள்ளத்தோடு தொழில செய்யும் மேலான சக்தியே கடவுள். உலகின் செயல்களனைத்தும் இதனைய இருதயத்திலிருந்து வெளிப்படுகின்றன. ஆனால் மனிதன் தனது அறியாமையினாலே தெய்வக் கருத்தின் செயல்களைப் பிழையாகக்கருதி, அதற்குக் கீழ்ப்படியாது அதம் கெதிராகப் போராடி இங்ஙனமாகத் துன்ப மயமாகிவிடுகிறான். கடவுளின் கருத்துக்குக் கீழ்ப்படிதலும், வாழ்க்கையி லேற்படும எல்லாச் சந்தர்ப்பங்களிலு மகிழ்ச்சியோ டிருத்தலும் இன்ப மயமான சுயநலமற்ற செயலில் ஈடுபடுதலும், மனிதன் அன்புமயமாகிய இறைவனோடு நெருங்கிய நேயம்பூண்டு அவனோடு ஐக்கியப்படுதலாலேயே முடியும். அவனோடு தொடர்பும் அவனொடு கலத்தலும் நாங்கள் எங்கள மனத்தினுள் இடைவிடாது கடவுள் நினைவு பெருகச் செய்வதால் தான் பெறமுடியும். அதைச் செய்யும்வழி, மனதைக் கடவுளின் இனிய மாட்சி பொருந்திய பெயரொடு இசைத்தலாகும். உண்மையில் அப் பெயரே பிரமம். அப்பெயரமுதை அருந்துபவன் நித்திய ஆனந்தத்தை அனுபவிக்கிறான்.

தெய்வத் திருநாமம் மனதை அதன் அகந்தை, வேட்கைகளிலிருந்து தூய்மைப்படுத்தி, அவனை ஒளியாலும் அன்பாலும் நிறைக்கிறது. பெயரைப் பற்றிய உள்ளம, கடவுளின் உலவமாகி விடுகிறது. அது மனிதனுக்கு எத்துன்பத்தையும் தாங்கும் அளவில்லாப் பொறுமையை அளித்து, மறைந்திருக்கும் ஆத்மீக சக்தியும் இன்பமும் அவனிலே புலப்படச் செய்கின்றது. கடவுளின் மாட்சிமிகுந்த பெயரின், பெருமை சக்தி அன்பு என்பவை இணையற்றவை. ஏனெனில் அதன் கருணையால், மனிதன் உலகின் தலைவனான இறைவனோடு, தன் ஐக்கியத்தையும் தன் நித்திய இயல்பையும் அறிகிறான். அப்பெயரின் சக்தியால மனிதன் அறியாமைத் திரையைக் கிழித்து, அறிவின் ஒளியால் தனினும் உலகிலுள்ள எல்லா உயிர்கள் பொருட்கள் உள்ளங்களி

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## பாடுதுங்காண் வானவன் பூங்கழலே!

திருச்சிற்றம்பலம்.

ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை
ஊனையு நின்றுருக்கி யென்வினையை யோட்டுகந்து
தேனையும் பாலையுங் கன்னலையு மொத்தினிய [டருளும்
கோனவன்போல் வந்தென்னைத் தன்றொழும்பிற் கொண்
வானவன் பூங்கழலே பாடு துங்காணம்மானாய்.

திருச்சிற்றம்பலம்.

அரசியல் அலை

# தளபதி சனபதி ஆனார்

## ஏசனோவர் வெற்றியின் அர்த்தம் என்ன?

## போர் வீரன் பொதுநல வீரனா?

அமெரிக்க சனபதி ஆர் ஆனல் என்ன, ஆயிரக் கணக்கான காதவழிக்கப்பாலிருக்கும் இலங்கை மக்களுக்கு அமெரிக்க சனபதித் தேர்தல் எவ்வாறானாலும் என்ன! 'ஐக்கும்' அமெரிக்கர் 'அட்லேயும்' அமெரிக்கர் அவ்வளவுதானே.

போர் வீரனைப் பொது நல வீரனுய்க் கருதுவது மேற்கு நாடுகளின் வேதாந்தம். வொன் கின்டஸ்பேர்க் ஜர்மனிய தலைவர் ஆனார்; அவ்வாறு பலவேறு நாடுகளிலுமா. எகிப்தில் இப்பொழுது அவ்வண்ணம் உண்டு.

ஆசிய நாடுகளிலும் அந்த மனப்பான்மை வரும்போலிருக்கிறது. முன்னை நாளில் அரசர்கள் போர் வீரர்களாகவே இருந்தார்கள். நெறியாளர் தருமர் போர்புரிந்தார். ஆனால் அவர்கள் அறப்போர் செய்தனர். அணுக்குண்டை உபயோகிக்கவில்லை.

இக்காலத்தில் காந்திப் பெரியார் புது முறைப் போர் நடாத்தி வெற்றி கொண்டார். அவ்வழி நின்ற திரு. இராசேந்திர பிரசாத் திரு. இராசகோபாலாச்சாரி திரு. நேரு அவர்கள் அரசபரிபாலனம செய்வது வேறு. அணுக்குண்டில் ஆசைகொண்ட தளபதிகள் ஆதிக்கம் வேறு.

அமெரிக்க சனபதித் தெரிவு முடிவு மூன்றும மகா யுததத்தைக் குறிக்கிறதா?

## பரவசமானர் பண்டித நேரு

காந்தியடிகளின் சேவாக் கிராமத்திலே காந்தியடிகளின் அரிய சேவைச் சிறப்பை Dr. ஹீசேன் அவர்கள் விளக்கிப் பேசியபொழுது கேட்டுக் கொண்டிருந்த பண்டித நேரு அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் ஊற்றெடுத்ததாம. அத்தளவில் நிற்கவில்லை. "பாரதத்தின் கதை" என்னும் ஒரு நாடகத்தை மாணவிகள் நடித்தனர். அதிலே "அகிம்சா போர்" இயக்கக்காட்சி வந்த பொழுது அதிற் பங்குபற்றுமாறு நேரு அவர்களை மாணவிகள் அழைக்க ,அவர் பரவசமாய் மேடைமீது பாய்ந்து அவர்களி லொருவராய் அகிம்சா போர் இயக்கத்திற் பங்குபற்றினராம். என்னே அன்பின் பெருக்கு! அகிம்சைக் கருத்தின் சிறப்பு!!

# பெண்மைப் பண்பின் பெருமை

## ஸ்ரீ சுத்தானந்த அடிகள் தரும் சிந்தனைச் செல்வம்

[சுவாமி ஸ்ரீ. சுத்தானந்த அடிகளார் இலங்கைக்கு வந்துள்ள இந்நாளில் அவரது பெருநூலாகிய "பாரத சக்தி" என்னும் மகாகாவியத்தில் காணப்படும் சில பெண் இயல்புகளைச் சிறிது நினைவு கூர்தல் நலமாகும்.]

"எண்ணினும் இயம்பினும்
இதயம் இன்புறப்
பண்ணிடும், தமிழகப் பண்பு".

இப் பண்பில் தோய்ந்து வளர்ந்த பெண்கள் எத்தகையோராய் இருப்பர்? ....

அவர் ஆத்மீக, லௌகிகத் துறைகளில பயின்று வாழ்வின் குறிக்கோளை அடைவர் ஒன்றைத் தவிர்த்து ஒன்றைக் கொள்ளார்.

"மண்ணியல் வாழ்விலும்
மகிழ்வர்; சாதனம்
பண்ணிப யோகத்தின்
பயனும் எய்துவார்".

இம் மங்கை நல்லாரின ஆர்வம் எங்கெங்கு இருக்கும்?

"நித்தியம சத்தியம்,
ஆன்ம நேயமும்
பத்தியும் காதலும்,
பணிவும் போற்றுவார்;
சத்தியின் கனலெனத்
தருமம் தாங்குவார்
பத்தினிப் பெண்டிரின்
பாதம் போற்றுவாம்".

.....................

பெண்மையைப் பூரணப்படுத்தும் புனிதச் செயலாம் மணம் இன்று ஓர் வர்த்தக உடன்படிக்கையாகி வருகிறது ஒரு புறம்; மறு புறம் "சரசு" காதல்.... எனும் கடைச் சரக்காகிவருகிறது! இந்த இருதலைக் கொள்ளியினுள் அகப்பட்ட இலட்சிய வாதிகளுக்கு உறுதுணையாக நிற்கும கருத்துண்டுளது:—

"வேலையும் வடிவினில்
வென்ற கவிளக்
காளையர் கருத்துற
நோக்கும் காதலால்
வாளையங் கண்ணினர்
மனதை நல்குவார்
கோளையும் நாளையும்
குறிப்பர் யாவரோ!"

தமிழனின் இலட்சியச் சோடிகள் எவ்வாறு வாழ்வர்?

"சந்தமும் பொருளும் போற்
சார்ந்து வாழுவர்
இந்திர போகமும்
இறைவன் யோகமும்
வந்தவர் வாழ்வினில்
வளர்வ தாகுமே".

மணமுறிவு, மனமுறிவு—இவை பரந்து வரும் இந் நாளில் 'தம்பதிகள்' ஒற்றுமை எவ்வாறிருக்கும்? எனக் காண்போம்:

"பழரசந் தேனுடன்
கலந்த பானமையோ!
குழலுடன் வீணையும்
குலவும் இன்பமோ!!
அழகிளம் பெண்மையும்
அறிவின் ஆண்மையும்
பழகிடும் பண்பினைப்
பகர்வ தாகுமே".

இப் பண்புடையாளர் இல்லறம் எத்தன்மைத்து?

"உடலுறவு மட்டு மன்று; கணவனும் தானும் ஓரே ஆன்மாவின் இரண்டு தோற்றங்கள் என்றும் ஆனம உறவை வளர்ப்பர்" என்கிறார் அடிகள்.

அத் தெய்வ மங்கையர் பதம் பணிகிறார்:

"மண்ணிலும் ஓங்க வந்த
மங்கலத் திருவின் மாதர்
கண்ணுளீர் தெய்வக் கற்பின்
கலைவினை வணங்குவோமால்"

அவர் தம் கற்பின் மகிமை என்னே?

"நாயகர் கற்பினை
நாற் பல் காக்கிடும்
தூயவர் கற்பினைத்
தொழுது போற்றுவாம்."

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே

இந்துசாதனம்

யாழ். நந்தனஹு ஐப்பசிமீ உஉ உ வெள்ளிக்கிழமை

## நோயாளர்களுக்குத் தொண்டு

வெறுநிலமக்கிறைத்த நீர் போலப் பொது நலப் பணியும் பலகாலும் வீண் முயற்சியாக முடிகிறதுண்மையே. கிராம முன்னேற்றத் தொண்டென்ற வகையில் விரயஞ் செய்யப்படும் பொருள் உண்மையில் ஊரவர்களுக்கு ஓரளவுக்குத் தானும் நன்மை அளிக்கின்றதா என்று அநுபவமிக்கவர்களே சந்தேகப்படுகின்றார்கள். வேறு அரசாங்க அலுவல்களிலும் அவ்வாறே செலவுக்குத்தக நயம் விளைகின்றதா என்றே வினவவேண்டியிருக்கின்றது. இவ்வாறெல்லாம் அவமாக அழிந்து போகும் பொருளையும் புரியும் ஆற்றலையும் பொழுதையும் நல்வழியிற் செலவு செய்தால் நாடு நனிபயன் அடையுமன்றோ?

உதாரணமாக நோயாளர்களை நோக்குமிடத்து இவர்களின் நிலைமையை அரசாங்கம் அவதானித்து ஆவன செய்ய வேண்டும் என்று பொதுவாக ஓர் அபிப்பிராயம் உண்டு. அரசாங்கம் வைத்தியசாலைகளை நிறுவி மருந்து வகைகளை உதவி இன்னமும் சில வசதிகளைச் செய்து விடலாம். இவை தாமும் நோய்வாய்ப்பட்டல்லல் உறுவார்க்கு வேண்டியளவு இல்லை என்றே அறிகின்றோம். பயங்கரமான நோயிலகப்பட்டு வருந்தி வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டிருக்கின்றவர்களுக்கு மருந்தும் இருக்கும் இடமும் அல்லப் பிரதானமானவை. அவர்கள் மனம் ஆறுதல் அடைய, இறைவன் திருவடி எண்ணத்தை உள்ளத்தில் அமர்த்த உதவியாக இருக்கும் சமய நூல்களும் பத்திரிகைகளும் பிரசாரங்களுமே பெரிதும் வேண்டப்படுவன.

தொற்று நோய் பற்றியிருக்கும் பரிதாபகரமான நிலையிலுள்ளவர்களை உற்று நோக்குமிடத்துப் பொதுசனத் தொண்டு உண்மையாக எங்கே பயன்பெறச் செய்யப்பட வேண்டுமென்பது புலப்படும். மகாத்மா காந்தியவர்கள் தம் வாழ்நாளிற் பெரும் பாகத்தை நோயாளர்களிடையே பணி செய்வதற்கு பயோகித்தனர் என்பது பழைய சரித்திரக் கூற்றல்ல இக்காலத்து நிகழ்ச்சிகளுள் ஒன்று. அவர்கள் மத்தியிலே கூட்டுப் பிரார்த்தனை செய்து இறைவனை அன்னோரோடு கூட இருக்கும்படி இரந்து நின்றனர் காந்திப் பெரியார். சமய நூல்களையும் நீதி சாத்திரங்களையும் நோயாளிகள் அறிந்து அகத்தமைவு பெறப் புத்தகங்களை உதவுங்கள் என்று சமூக சேவையாளர்களுக்குக் காந்திமகான் பணித்ததுண்டு.

இந்த விதமான தொண்டே புண்ணியத்தை விளைவிப்பது; பாவத்தை உண்டு பண்ணாதது; பொருளும், பொழுதும், புரியும் ஆற்றலும் நல்ல வழியிற் செல்வனவாகும் தன்மையது. பாலுக்குப் பாகில்லை என்பாருக்குப் பரிந்துதவிபுரியும் மனப்பான்மை நிலவுகின்றதேயல்லாமல் கூழுக்கும் வழியில்லாதவர்களுக்குக் கொடுப்பாரில்லை. அது போன்று சமயப்பிரசங்கங்களையும் நூல் நிலையங்களையும் வாசிகசாலைகளையும் இவற்றை முயன்று பெறக்கூடிய வசதிகளுடையவர்களுக்கு அமைத்து வைப்பதிலும் தொற்றுநோயாற் றுயருறுகின்றவர்களுக்கு உதவுவதே மிக நன்று. சில நாட்களுக்கு முன் காங்கேசன்துறைக் கயரோக வைத்தியசாலை நோயாளர்கள் சைவப்புத்தகங்கள் வேண்டி விடுத்த விண்ணப்பத்தைநேயர்கள் நினைவு கூருவார்களாக. நூற்பதிப்பு நிலையங்கள், அச்சகங்கள், புத்தக விற்பனையாளர்களே இத்தொண்டுபுரிவதற்குமிகுந்த உதவி செய்யக்கூடியவர்கள். சமய நிலையங்களும் சமயாபிமானிகளும் இப்பணியை இறைபணியாகக் கருதி நோயாளர்களுக்கு உற்சாகம் அளிக்க முன்வருதல் வேண்டும்.

பாராளுமன்றத்தில்

## இந்தியர்கள் இலங்கையராகும் உரிமைச் சட்டம்

### இன்னமும் சில திருத்தங்கள்

இந்தியர்கள் பாகிஸ்தானியர்கள் இலங்கையராவதற்கான சட்டத்திற் சில மாற்றங்களை அமைக்கவேண்டுமென்ற ஒரு திருத்தச் சட்டத்திட்டத்தைப் பிரதம மந்திரியவர் சனப்பிரதிநிதிகள் சபையில் முதல்முறையாகக் கொணர்ந்தார். உரிமை கோருபவருடன் அவரின் மனைவியும் பராயமாகாத பிள்ளைகளும் தொடர்ந்து இலங்கையில் வசிக்கவேண்டுமென்ற மாற்றமும் இவற்றுள் ஒன்று.

முன் அனுமதிபெற்றே தாய்மொழியிற் சனப் பிரதிநிதிகள் சபையிற் பேசவேண்டுமென்ற பிரமாணத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று பிரதிநிதி திரு சோமவீரசந்திரசிறி ஒரு பிரேரணை கொண்டுவந்தார். விவாதத்தின்பின் 42 வாக்குகள் பாதகமாகவும் 19 வாக்குகள் சாதகமாக இப்பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இவ்வாரப் பலன்கள் 9—11—52——15—11—52

**மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.**

உத்தியோகமளவில் நல்லகாலம் ஆனால் குடும்பக் குழப்படிக்கும் சுகவீனத்துக்கும் இடமுண்டு. செலவதிகரிக்கும். வார இறுதியில் சிற உத்தியோகத் தொந்தரவுகளுக்கிடமுண்டு.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

இந்தவாரம்போட்டியிடுவோரை வெல்லக்கூடும். உத்தியோகத்தொந்தரவுகள் நீக்கப்பட்டுச் சொந்த விஷயங்களில சிறிது முன்னேறக்கூடியதாயிருக்கும். வார இறுதியில் தந்தை வழி இனத்தவர் சில துன்பங்களை உண்டாக்கக்கூடும்.

**மிதுனராசி மிருகசீரிடம, 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

இந்த வார இறுதியில் உம்முடைய தொந்தரவுகளிற பல நீங்க வேண்டும். வரவு செலவு சமாளிக்கக்கூடியதாயிருக்கும். காத்திராத சில நல்ல புதினம் உற்சாகத்தையூட்டும். ஆனால் குடும்பப் பகுதியில எல்லாம் நலமாயில்லை.

**கடகராசி புனர்பூசம் 4ம பாதம் பூசம் ஆயிலியம்.**

சொந்தக் காரியங்களுக்கு நல்ல வாரம். புதுமுயற்சிகளிற சித்தியும் நிச்சயம் உம்முடைய பல கஷ்டங்களிலிருந்து நீங்கக்கூடியதாயிருக்கும், செலவுமாத்திரம் அதிகரிக்கும்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

புதுமுயற்சி எல்லாவற்றுக்கும் நலலவாரம், குடும்ப அமைதியும மனச்சமாதானமும் நிசசயம் அதிக கஷ்டமின்றி விரும்பியவற்றைப பெறலாம.

**கன்னிராசி உத்திரம் 2 3 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2 பாதம்.**

இந்த வாரம் தேக சுகம் பெருஞ் சிக்கலாயிருக்கும். வயிற்றுக் குழப்படியிருந்தால் குறிப்பாக அதேகாரணமாகும். வார இறுதியிலிருந்து உத்தியோக விஷயங்களில் சில திருத்தம் நிச்சயம்.

**துலாம சித்திரை 3,4 ம பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்.**

புதுமுயற்சிக்கு நல்லவாரம். காத்திராத இலாபமும் போட்டியிடுவோரைவெல்லுதலும் நிசசயம். குடும்ப அமைதியும் உண்டு.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

இந்தவாரம் நண்பரிடமிருந்து அதிக உதவியைப் பெறக்கூடியதாயிருக்கும். சிறிது கூட முயன்றால் விரும்பியவற்றை நிசசயமாய்ப் பெறலாம. வார இறுதியில் தேகசுகத்தைப்பற்றி விசேஷ கவனமாயிருக்க வேண்டும.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம 1 ம் பாதம்.**

இந்த வாரம் சண்டையுண்டாக்குதற்கு விரைந்து போவீர். முன் இருநாட்களும உம்மை அதிகம் நிலைகுலைக்கும். வார மிகுதி முற்பகுதியிலும் நல்லயிருக்கும். அபாயங்களைப்பற்றி எச்சரிக்கையாக இருக்கவும்

**மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம திருவோணம அவிட்டம் 1, 2ம் பாதம்.**

சிறிது காலத்துக்குத் தேகசுகம் சிக்கலாயிருக்கும். தேகத்தில அதிக வெப்புக்கிடமுண்டு திங்கள் மாலை செவ்வாய் புதன் கவனமாய்க்கழிக்கவேண்டும். வாரஇறுதி நலமிருக்கும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம, சதயம, பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

இந்த வாரம் நண்பரில் அதிகம் தங்கவேண்டாம். புதன் மாலை, வியாழன் வெள்ளி கவனமாய்க்கழிக்கவேண்டும். வார இறுதி நல்லாயிருக்கும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

சனிக்கிழமைத் தவிர இந்த வாரம் மிக நல்லாயிருக்கும். விரும்பியவற்றுள் ஒன்றிற் சித்தி பெறக்கூடியதாயிருக்கும். காத்திராத இலாபமும் பகைவர் அழிவும் நிச்சயம். சனிக்கிழமையைக் கவனமாய்க் கழிக்கவும்.

திருத்தொண்டர் திருநாள்

## அத்தன் அடியாரை இகழ்வது பொறாத சத்திநாயனார்

சோழநாட்டிலே வரிஞ்சையூரிலே சத்திய நெறிக்கண் ஒழுகுகின்றதாகிய வேளாண் குலம் விளங்குமாறு சத்திநாயனார் திருவவதாரஞ் செய்தார். அவர் சிவபெருமானுடைய திருவடிகளுக்குத் திருத்தொண்டு செய்பவர்.

"வரிஞ்சை யூரினில்
வாய்மைவே ளாண்குலம்
பெருஞ்சிறப்புப்
பெயப்பிறப் பெய்தினர்
விரிஞ்சன் மால்முதல்
விண்ணவர் எண்ணவும்
அருஞ்சி லம்பணி
சேவடிக் காட்செய்வார்."

சிவனடியார்களை இகழ்ந்து பேசுகின்றவர்களுடைய நாவை அரிகின்ற சக்தியுடையவராகையினாலே சத்தியார் எனுந் திருநாமம் இவருக்கு உண்டாயிற்று. இவர் அருளில்லாதவர்களாய் அடியாரை இகழ்ந்து பேசுவோருடைய நாக்களை தண்டாயத்தினால் வலித்துக் கூரிய கத்தியினால் அரிதலாகிய அன்பின் வழித்தாய திருத்தொண்டு செய்தலில் உயர்வு பெற்றார். அத்தகைய ஆண்மை பொருந்திய திருத்தொண்டை வலியுடன் அன்போடு நெடுங்காலம் செய்து சிவபெருமானுக்குத் திருத்தொண்டு செய்யும் நெறியில் நின்றனர்.

"அன்ன தாகிய
ஆண்மைத் திருப்பணி
மன்னு பேருல
கத்தில் வலியுடன்
பன்னெ டும்பெரு
நாள் [illegible]
சென்னி ஆற்றினர்
செந்நெறி ஆற்றினர்"

எவ்வித சந்தேகமுமின்றி அரியதாகிய இத்திருத்தொண்டைச் செய்து வாழ்ந்து வீரம் பொருந்திய நாயனார் உலகம் உய்யுமாறு கனகசபையின் கண்ணே திருநிருத்தஞ் செய்தருளுகின்ற நடராசப் பெருமானுடைய திருவடி நீழலை யடைந்தார்.

"ஐய மின்றி அரிய திருப்பணி
மெய்யி னிற்செய்த வீரத் திருத்
தொண்டர்
வையமுய்ய மணிமன்று ளாடுவார்
செய்யபாதத்திருநிழல்சேர்ந்தனர்."

சைவாச்சிரம நாவலர் மண்டபத்தில்

## திருமூல நாயனார் குருபூசை

நந்தன வருடம் ஐப்பசி மீ௴ கூஉ (1-11-52) சனிக்கிழமையன்று யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை ஆதரவில் அச்சபையின் நாவலர் மண்டபத்தில் இரவு ஆறரைமணி தொடக்கம் 9 மணிவரை திருமூல நாயனார் குருபூசை நடத்தப்பட்டது. கடவுள்வாழ்த்தினை கிழ்ந்தபின் திரு வே. சோமசுந்தரம் அவர்கள் திருமூல நாயனார் எனும் பொருள் பற்றி ஓர் பிரசங்கஞ் செய்தனர்.

திருக்கைலாயமலையில் நந்தி பெருமான் திருவருள் பெற்ற ஞானமறை யோகிகளுள் ஒருவர் திருவாவடுதுறையை யடைந்து பொன்னியாற்றங் கரையிலுள்ள ஒரு காட்டில் பசுக்கள் மேய்க்கும் மூலன் எனுமிடையன அங்கே இறந்து கிடக்கக்கண்டு தம் உயிரை அவனுடலிற் புகுத்தித் திருமூலராயெழுந்ததையும பசுக்கள் கவலைதீர்ந்து களிப்படைந்ததையும் பசுக்கள சாயங்காலம தங்கள் தங்கள் வீடுகளுக்குச்செல்ல திருமூலர் சிவயோகத்தி லிருந்து சிவபெருமான் அருளிச்செய்த சைவாகமம் இருபத்தெட்டின உண்மைப் பொருள்களை எல்லாம தமிழுலகத்துக்கு உபயோகப்படுமவண்ணம ஆண்டுக்கொரு திருப்பாட்டாக 3000 பாடல்கள கொண்ட திருமந்திரம என்னும் நூலை அருளிச்செய்தாரென்பதையும் பிரசாரகர் விளக்கிக் கூறினர்.

பின்பு முதலியார் C. முத்துத்தம்பி அவர்கள் அறுபத்துமூன்று நாயன்மாருடைய குருபூசைகளும் நாவலர் பெருமான் எழுதிய குருபூசை விதியிற் காட்டிய வண்ணம் தமிழ் நாடெங்கும் நடைபெறவேண்டுமென்றும் திருமூலநாயனாருடைய திருமந்திரம என்னும் நூல் சைவ உலகிற்கு ஒரு பொக்கிஷமெனவும் அதனைப்பற்றித் திரு. வே. சோமசுந்தரம் போன்ற அறிஞர்களே பிரசங்கஞ் செய்யத் தகுதியுடையவரெனவும் குறிப்பிட்டுப் பிரசாரகருக்கு நன்றி கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரம்

## உயர்திரு. ச. சபாரத்தினமுதலியார் J. P. அவர்கள் 1882 ஆ. கார்த்திகை மீ 7 உ. உதயபானுவில் எழுதியது

இலங்கையிலேயுள்ள தேவாரம்பெற்ற சிவஸ்தலங்கள் இரண்டனுள் ஒன்றாகிய திருக்கேதீச்சரத்தின் மகிமையை எல்லாம் நீங்கள் நன்றாய் அறிவீர்கள். இந்த ஸ்தலம் இப்போது கிலமாய்க் கிடத்தலையும் நீங்கள் அறிவீர்கள். இதனைப் புதுக்குவித்தலைப் போலப் புண்ணியம் பிறிதொன்றுமில்லை என்பதையும் அறிவீர்கள். இதனைப் புதுக்குவித்தற்கு இதுவே தருணம்; மாதோட்டத்திலுள்ள (Giants Tank) இராட்சத குளத்தை அரசாங்கத்தார் புதுக்குவிக்கப் பிரயத்தனம் செய்வார்போற்றோன்றுகின்றது; அதனோடு பாம்பனிலே ஒரு துறைமுகம் செய்து இந்தியாவையும் இலங்கையையும் புகைரத வீதியால் இணைப்பதற்கு இந்திய அரசாங்கத்தார் பெருமுயற்சி செய்கிறார்கள். இது நிறைவேறுமாயின் மன்னார் மாதோட்டம் இராமேச்சரம் முதலிய இடங்கள் கல்கத்தா முதலிய பட்டணங்கள் போல் ஆம் என்பதற்குச் சிறிதும் தடையில்லை. இவ்விடங்களிலுள்ள நிலங்களுக்கெல்லாம் ஏக்கர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா வரையில் விலையுயரும். ஆதலின் இதனையே தருணமாகக் கொண்டு மாதோட்டத்துள்ள கோயில் நிலத்தை வாங்கிக் கிலமாய்க்கிடக்கும் அந்த ஸ்தலத்தைப் புதுக்குவிப்பீராயின் அதனாற் புகழும் புண்ணியமும் செல்வமும் ஒருங்கே பெறுவீர்கள்".

மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன் வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றார் பாம்பணிந்த
சென்னியர்மா தோட்டத்துத் திருக்கேதீச்சரஞ் சார்ந்து
சொன்மலர்மா லைகள்சாத்தித் தூரத்தே தொழுதெழுந்தார்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் வண்ணார்பண்ணை மேற்கு யாழ்ப்பாணம் முகம்மது சுல்தான் முகமது. —வழக்காளி.

இல. 6203 எதிராக

1. நாவாந்துறை யாழ்ப்பாணம் சுவாம்பிள்ளை மரியாம்பிள்ளையும்
2. பெண் சலோமை.

—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 6203-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகளை 1952ஆம் கார்த்திகைமீ 29உ சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1228/= ம் ரூபா: 800/=க்கு 6-12-49 தொடக்கம் 10-1-1950 வரைக்கும் 12 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா: 195-70 சதம்.

### காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைப் பகுதி வண்ணார்பண்ணை "நாவலடி" பா. நி இல. 2 (இரண்டு) கல்வீட்டு அத்திவாரமும் வீடும் தலைவாசலும் பயிர் வகைகளும் எல்லை கிழக்கு மரியாம்பிள்ளைக்கும் பெண் திரேசம்மாவிற்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள் வடக்கு ஒழுங்கை மேற்கு யாக்கோப்பிள்ளையின் ஆதனம் தெற்கு வயித்தியான அந்திரிடானுக்கும் சகோதரர்கட்கும் மனுவேல் பெண் செல்லாச்சிக்கும் சகோதரர்கட்குமுரிய ஆதனம். இதிற் சொரியலாய் $\frac{1}{3}$ பாகம்.

2. ஷை வண்ணார்பண்ணை மேற்கிறை "நாவலடி" பா நி இல. $2\frac{1}{4}$ ஆனால் உத்தரவுபெற்ற உலாந்தா J. D. வீரசிங்கத்தன் 1945 ம் ஆ. ஆனிமீ 13உ 273-ம் இலக்கப் படத்தின்படி டா. நி இல. 3 குளி $14\frac{1}{2}$ யும் கிணறும் வீடும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு ஒழுங்கையும் சுவாம்பிள்ளை மரியாம்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய வாதனம் வடக்கு துரையப்பாவின ஆதனமும் முடிக்குரியவாதனமும் மேற்கு துரையப்பாவிற்கும் மத்தேசு மிச்சேலுக்குமுரியவாதனம் தெற்கு வலததீசான் ரேசமுத்துவிற்கும் பங்காளருக்குமுரியவாதனம்.

1952-ம் ஆ ஐப்பசிமீ 27உ

வை ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்.

M. 157 7—11—52.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மானிப்பாய்

1. தம்பையா சிவக்கொழுந்து (மரணம்)
2. பெண் திலகவதிப்பிள்ளை

—வழக்காளிகள்.

மானிப்பாய்

1. சிவக்கொழுந்து முத்துக்குமாரசுவாமி
2. சிவக்கொழுந்து இராசேந்திரன் (காலம்சென்ற யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 721-ம் இலக்கத் தத்துவ வழக்கில் தத்துவகாரராகவும்.

—பதில் வழக்காளிகள்.

இல. 13675 எதிராக

வண்ணார்பண்ணை மேற்கு சுளுத்தான அப்துல்காதர்முகமெட் முகமடன். —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸதிறிக் கோட்டில் 13675-ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1952-ம் ஆண்டு நவெம்பர் (கார்த்திகை) மாதம் 20-ந் திகதி (20-11-52) வியாழக் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 672-00-ம், இதில் ரூபாய 600/= க்கு 21-10-38 திகதி தொடக்கம் 100-க்கு 12வீத வட்டியும், ஆனால் அவ்வித வட்டி ரூபா 450/=க்கு மேற்படாமலும் கோட்டுச் செலவு ரூபா 229-85 சதம்.

### காணியின விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கிறை "ஓட்டைப் புளியடி" நிலப் பரப்பு இரண்டு (2-ம்) குளி 6-ம் கட்டிடங்களும் கிணறும் மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு இராமநாதர் சின்னத்தம்பியின் ஆதனம், வடக்கும் மேற்கும் ஒழுங்கை, தெற்கு முகமெட் உசன்முகமெட்முகமடினின் ஆதனம. இதில் சொரியலாய் நிலைப்பரப்பு ஒன்று (1-ம்) குளி $2\frac{5}{8}$-ம் அதற்குரியவைகளும்,

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioner

முற்பதிவு D 123/54
தெல்லிப்பழை
10-10-1952.

M. 159 7—11—52.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் Dr. வீரசத்திப்பிள்ளை துரைசாமி

—வழக்காளி

இல. 9066 எதிராக

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி ரோட், என். எஸ். சேதுராசா செட்டியைம் பெண் நாகமுத்து யாழ்ப்பாணம் காலம் சென்ற என். எஸ் சேதுராசாசெட்டியின் ஆஸ்திக்கு பிரதி காரியஸ்தராகவும்

—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 9066-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1952-ம் ஆண்டு நவெம்பர் (கார்த்திகை) மாதம் 27-ந் திகதி (27-11-52) வியாழக் கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 13175/=-ம், இதில் ரூபாய் 10000/= க்கு 1-8-52 திகதி தொடக்கம் 24-9-52 திகதி வரைக்கும் 100-க்கு 6 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 300/=

### காணியின விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை "புகைகுகின்ற உப்புக்குளமும் புகைகின்ற உப்புக் குளக்கரையும் மறுபிரிவுகளும்" நெற் பரப்பு 74 குளி $10\frac{3}{4}$-ம் இதில் மேற்குப் பக்கமாக அரைவாசி நெற்பரப்பு 2-ம் குளி $5\frac{3}{8}$ இதில் மேற்குப் பக்கமாக நெற்பரப்பு ஒன்று (1-ம்) குளி 2 11/16ம் ஒரு கடைக் கட்டிடமும் மற்றும் வீடுகளும் பயிர்களும் எல்லை கிழக்கு என் எஸ். சேதுராசா செட்டியின் ஆதனம். வடக்கு இக்காணிக்கும் மறு காணிகளுக்கும் பொதுவாக விடப்பட்ட ஒழுங்கை மேற்கு அருணாசலம் செட்டி முத்துவேலுச் செட்டியின் ஆதனம், தெற்கு ஸ்ரானலி ரோட்டு இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

முற்பதிவு D 181/184
தெல்லிப்பழை
4—10—1952

M. 160 7—11—52.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

காரம்பன் ஊர்காவற்றுறை நாராயணபிள்ளை கந்தையா

— வழக்காளி

இல. 8188

எதிராக

1. சரவணை இராமலிங்கம் பொன்னையாவும் பெண்
2. பொன்னுச்சிப்பிள்ளை
3. வேலணை கிழக்கு என். லிங்கப்பிள்ளை நாகலிங்கம்
4. சரவணை குமாரு குழந்தைவேலு

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 8188-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணி 1952 ஆம் கார்த்திகை மூ 24 உ திங்கட்கிழமை முற்பகல் ஒன்பது மணிதொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல்வட்டி நுபா 1000-ம் நுபா 766-64 க்கு 20-9-51 தொடக்கம் 31-3-52 வரைக்கும் 10 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு நுபா 248-24 சதம்.

### காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோயிற்பற்று சரவணையிறை "பெரிய சத்திரியபுலமு அல்லது சத்திரிய புலமும் பெரிய சத்திரிய புலமும்" பா. நே இலா 25 குளி $1\frac{1}{2}$ எல்லை கிழக்கு செல்லப்பா பெண் தெய்வானையின் ஆதனம் வடக்கு சுப்பிரமணியம் கந்தையாவிற்கும் செல்லப்பா பெண் சின்னம்மாவிற்குமுரிய வாதனம் மேற்கு செல்லப்பா பெண் சின்னம்மா வினுதனம் தெற்கு வேலாயுதர் நல்லதம்பியின் உரிமைக்காரினுதனம்.

2. ஷை சரவணையிறை "காட்டு வனவம்" பா. நே. இலா. 12 எல்லை கிழக்கு வாய்க்கால் வடக்கு கணபதிப்பிள்ளை முத்தையாவின அதனம் மேற்கு 2-ம் எதிரி பொன்னையா பெண் பொன்னுச்சிப்பிள்ளையின் ஆதனம். தெற்கு ஐயம்பிள்ளை சுப்பிரமணியத்திற்கும் பெண் சின்னம்மாவிற்கும் கந்தையா பெண் நாகம்மாவிற்கும் ஐயம்பிள்ளை சுப்பிரமணியத்திற்கும் பெண் சின்னம்மாவிற்குமுரிய ஆதனங்கள். இதிற் சொரியலாய் $\frac{7}{8}$ பாகம்.

1952-ம் ஆ ஐப்பசி மீ 20ம் உ

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்

M 158 7-11

---

## பிரகடனம்:

திருவாதவூரடிகள்புராணம் உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை நுபா 2-00.

பிரதோஷவிரதமான்மியம் (புதியபதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு இதனை அநுட்டிக்கவேண்டிய முறை, புத்திபூர்வமாகவும் அபுத்திபூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40.

வில்லிபாரதம் - புட்பயாத்திரைச்சருக்கம்: பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருளவிளக்கவிரிவுரை, நூலாசிரியர்வரலாறுமுதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ்ஆங்கில S.S.C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம்பதிப்பு) விலை ரூ. 1-25ச.

அரிச்சந்திரபுராணம் - மயானகாண்டம் மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக்குறிப்பு, நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன் உயர்தரவகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்: மேற்படி பண்டிதர்எழுதியது; கொழும்பு விவேகாநந்தசபையார் நடத்தும் சைவசமயபாடப்பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக்கதை I. (கோபாலநேசரத்தினம்) ஷைபண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத்தெவிட்டாதது. விலை ரூ. 1—25ச

ஈழமண்டலசதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது இலங்கையின் மான்மியத்தை எடுத்துவிளக்குவது; விரிவுரையுடன் விலை ரூ. 1-00

சைவசமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம்(B.A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை ச 45

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத்தக்கது. முகதி வெளிவாரதது. விலை 60 சதம் (அணா 10)

புலியூர் (யமக)அந்தாதி மாதகல் மயில்வாகனப்புலவர்இயற்றியது ஆசிரியர் ம. க. வேற்பிள்ளைசெய்த உரையுடன் விலை சதம் 50.

**முற்பணமனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்.**

Apply: to PANDIT V. T. SAMBANDHAN Vannarponnai, Jaffna

---

## தேவை

அராலி ஐக்கிய பண்டசாலைக்கு மனேஜர் ஒருவர் தேவை, பிணைப் பணம் ஐந்நூறு ரூபா. அநுபவமுடையவர்கள், பயிற்சிப் பாடசாலையிற் படித்தவர்கள் விசேடமாகக் கவனிக்கப்படுவர். சம்பளம் அறுபது ரூபாவுக்குக் குறையாது தகுதிக்கேற்பக் கொடுக்கப்படும். 14-11-52 க்குமுன் காரியதரிசிக்கு மனுச்செய்க.

அ. முருகேசு
காரியதரிசி

J 374 ஐக்கிய பண்டசாலை
அராலி P. O.
அராலி தெற்கு
28—10—52.

155 4-11. 7-11-52

---

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரியர் அவர்களே,

### சைவ பரிபாலன சபைக்கு வேண்டுகோள்

சிதம்பராலயத்துக்கென எழுதப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள காணிகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் என "வீரகேசரி"ப் பத்திரிகையிற் படித்தேன். இக் காணிகளைத் திருக்கேதீச்சரத்தானுக்கு அல்லது கோணமாமலையானுக்குச் சேர்க்க வழியுண்டா? வழியுண்டேல் இப்பொழுதே யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக் காரியதரிசி அவர்கள் நாவலர் மண்டபத்தில் ஓர் அவசரக்கூட்டம் கூட்டுமாறு மிகவும் தாழ்மையுடனும் மன்றாட்டத்துடனும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
பொ. காசம்

கொழும்புத்துறை
5—11—52.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குத்தகைக்கு நிலம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்குச் சொந்தமானதும் நாயன்மார் கட்டு ஆசுபத்திரிக்கு அணித்தாயுள்ளதுமாகிய 22 பரப்புக்கொண்ட "வீரன்புலம்" என்னுங் காணியை 1952 ம் ஆண்டு அக்டோபர் மாசம் முதலாந் தேதி தொடக்கம் மூன்று ஆண்டுகளுக்குக் குத்தகைக்குக் கொடுக்க மனுப்பத்திரங்கள் ஏற்கப்படும்.

ஆதனத்தைக் குத்தகைக்கு ஏற்பவர் ஒருவருடக் குத்தகைப் பணத்தை உடனே கட்டவேண்டும்.

இந்துக்கல்லூரி அதிகாரசபைக்கு ஷை குத்தகையை அங்கீகரிக்கும் அல்லது புறக்கணிக்கும்உரித்து உண்டு. குத்தகையை அதிகார சபை அங்கீகரித்தால் ஏற்பவர் தனது செலவில் நொத்தாரிசு மூலம் குத்தகை உறுதி முடிப்பிக்க வேண்டும்.

நவம்பர் மாசம் 17-ந் திகதிக்கு முன் மனுப்பத்திரங்கள் அனுப்ப வேண்டும்,

அ. அருளம்பலம்
கௌரவ காரியதரிசி
யா. இ. க. இ. சபை
யாழ்ப்பாணம்,
4—11—52.
M 156 4, 7, 11-11-52

## தெய்வத் திருப் பெயரின் சத்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் இறைவனைக் காண்கிறான். எல்லையற்ற அன்பே கடவுள். அவன் எங்கள் யாவருள்ளும் உள்ளான். நாங்கள் என்றும் அவனோடு இசைந்துள்ளோம்; அவனின் வேறாகவும் உளளோம். பேரின்ப அன்னையின் பேரின்பச் சேய் மனிதன். ஏனெனில் அழியா இன்பம். அமைதியே உருவானோன் கடவுள். தெய்விக இன்பத்தால் இதயம் மலர்ந்ததும் அது தூய அன்பு வெள்ளத்துள் உலகமும் அதன் உயிர்களும் அமிழ்க்கின்றன. தெய்வத் திருப்பெயர் எங்களை இந்த ஆனந்த சாகரத்துட் கொண்டு செல்கின்றது. தெய்வத் திருநாமத்தின் அளவிலா மாட்சியை அறிந்து அனுபவிப்பவன் அருள் பெற்றவனா மூக்காலும் அருள்பெ றவன்.

— சிவதொண்டன.

## பெண்மைப் பண்பின் பெருமை!

( முதலாம்பக்கத் தொடர்ச்சி )

அவர்தம் கற்பு நாட்டுக்கே பேராணாகும்.

'மற்புய வீரரின்
  மன்னர் நீதியின்
சொற்பொழி புலவரின்
  சூழமை ச்சரின்
பொற்புறு செல்வரின்
  புனித மாதரார்
கற்பெழில் அந் நிலச்
  காவல் ஆவதே"

பிள்ளை வளர்ப்பு பெருஞ்சுமை எனக்கருதும் (இந்த) வியாபார சமுதாயத்தில் மானிடராவரை எப்படி வளர்க்கப்படுவர் எனக் காண்க:

"கொஞ்சிளம் பூவையர்
  கோட்டியா முடன்
அஞ்சலில் வீரரின்
  அதிசயக் கதை
பிஞ்சிளம் பிள்ளைகள்
  பேசப் பேசுவார்."

இக் கருத்துக்கள் நாட்டுப்படலம் முதலிய ஆரம்பப் பகுதிகளில் இடையிடையே எடுத்தவையாகும். அடிகளாரை வாளா வயோரப் போற்றுவதிலும் அவர் சிந்தனைகளை நினைத்து மகிழ்தல் நலன் மிகத் தரும்.

# அடைவு நகை விற்பனவு
## விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு குமாரவேலு செல்லையா கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி எடுபடாமல் இருக்கும் கீழ்விபரிக்கப்படும் நகைகள் 29-11-52 சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

| | | | |
|---|---|---|---|
| 2712 | 22-3-50 | 8.00 | ராப்ஸ்ரோட் மு. முகமது அப்துல்காதர் கல் மோதிரம் 1 |
| 3379 | 15-6-50 | 10 | நாவாந்துறை கு. குருசுமுத்து சாதா. மோதிரம் ஒன்று. |
| 4258 | 25.9-50 | 20 | ஐதுரூஸ் மொகாம் லேன் மு அப்துல் றசீத வெ. கல், தூக்கம் சோடி 1. |
| 4591 | 2-11-50 | 12 | ராப்ஸ்ரோட் மு. மீராமுகிதீன கால் காப்பு 4. |
| 5219 | 8 1 51 | 70 | மாணிப்பாய் ரோட் S. முகமது சுலதான் கைச் சங்கிலி சோடி 1 சுரை இல்லை. |
| 5349 | 22-1 51 | 17 | நாவாந்துறை ரோட் S. M. சுல்தான் பழுது கைச் சங்கிலி |
| 73 | 31-3-51 | 100 | நாவாந்துறை பொ. அசுபதி வளையில் காப்பு சோடி 1 |
| 278 | 26-4-51 | 12 | முகிதீன்பள்ளி ரோட் S. M. முகம்மது சுலதான் அலுக்குத்து 1. குச்சி 1. |
| 321 | 30 4-51 | 10 | கொல் ஒழுங்கை மு. அப்துல் அசீஸ (வெ, கல் தூக்கம் சோடி 1) |
| 618 | 6 6-51 | 50 | ஐந்தசந்தி மீ. அப்துல் றகீம் பூட்டுச் காப்பு 1. |
| 758 | 27-6-51 | 20 | ஐதுரூஸ் மொகாம் லேன் மீ. வதூர் பெட்டி மோதிரம் 1 |
| 866 | 17-7-51 | 6-00 | பிரப்பங்குளம்ரோட் M. A கறீம் வெ. கல் குச்சி சோடி 1, |
| 1086 | 15-8-51 | 42 | நாவாந்துறை சி. விஸ்னு திருகாணி இல்லாத பழுது கை சங்கிலி 1. |
| 1238 | 4-9-51 | 30 | பிரப்பங்குளம ரோட் அ. மீரா நாச்சியா வெ. கல். பெண்டன் 1, |
| 1231 | 4-9-51 | 10 | நாவாந்துறை த. செல்லம்மா நாட்டுக் கடுக்கன் சோடி 1. |
| 1249 | 5-9-51 | 10 | வில்லூண்டிரோட் அ. இபுராகிம் பூசாந்திரம 1. |
| 1265 | 8-9-51 | 10 | நாவாந்துறை நா. செல்லையா தூக்கம் குச்சி சோடி 1. |
| 1346 | 18 9-51 | 15 | பிரப்பங்குளம் ரோட் அ. மீரா நாச்சியா வெ. கல. பிளாக் 1. குச்சி 1. சுரைஇல்லை |
| 1374 | 18-9 51 | 50 | முகிதீன பள்ளிரோட் K. M. அபுபக்கர் ப. கல். மோதிரம் 1. |

29-11-52 சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கமாக பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வண்ணார்பண்ணை, S. Pasupathy Chettiar,
5—11—52. வெந்திஸமேஸ்தர்.
M. 163 7, 11—11—52.


நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி. எம். சாமி

**தங்க பஸ்பம்**

உபயோகியுங்கள்

தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரதத விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதிஅற்புதசுகந்தரும. நீரழிவு பவுத்திரம், மூலம், குனமம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்குமு,

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25—0—0

**குருபஸ்பம்** (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும். அருமையானது.

24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனும்)

M. 16. 25-4-52—25-10-52.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond residing at 245; Navalar Road, Jaffna, for and on behalf of the Froprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday November 7 1952.


சமூக வாழ்க்கையைச் சித்திரிக்கும்

**சுசீலாவின் காதல்**

யாழ். நகர மண்டபத்தில்
ஐக்கிய இயக்க உத்தியோகத்தர்களால்
1952-ம் ஆ
மார்கழி மீ 6-உ சனிக்கிழமை
சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம நிதிக்காக
மிக விமரிசையாக நடத்தப்படும்



திறமான **தேக்க மரங்கள்** பல தினிசுகளிலும் | திறமான **ருணி**மார்க்**ஓடுகள்** 13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.



**யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி**

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறுப்பர்.



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE



நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
**நகை**
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org